## கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

அ.வ.எண்.382/2020 வா.சா.1 முத்துவேல்

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 17.11.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2,3 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) வழக்குச் சொத்துகள் ஆதியில் என் தந்தை ராக்கியப்ப கவுண்டருக்கும் அவரது சித்தப்பா முத்துக்கவுண்டர் (எ) முத்துச்சாமி கவுண்டருக்கும் பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான். என் தந்தை ராக்கியப்ப கவுண்டரும் அவரது சித்தப்பா முத்துக்கவுண்டர் (எ) முத்துச்சாமி கவுண்டரும் கடந்த 09.12.1985 அன்று வா.சா.ஆ.1 பாகசாசனப்படி வழக்குச் சொத்துகள் உள்ளிட்ட சொத்துகளை தங்களுக்குள் பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பாகசாசனப்படிதான் நான் சொத்துகளை அனுபவித்து வருகிறேன் என்றால் சரிதான்.

2) என் தந்தை ராக்கியப்ப கவுண்டருக்கு யார் வாரிசுகள் என்றால் வாதிகள் நாங்கள் இருவர் மட்டும்தான் வாரிசுகள். முத்துக்கவுண்டர் (எ) முத்துச்சாமி கவுண்டருக்கு 1ம் பிரதிவாதிதான் வாரிசு என்றால் 1ம் பிரதிவாதி போக முத்துக்கவுண்டருக்கு மேலும் இரு மகள்கள் உள்ளனர். வா.சா.ஆ.1 பாகசாசனப்படி என் தந்தைக்கு ஒதுக்கப்பட்ட சொத்துகளைத்தான் அவரது காலத்திற்குப்பின் வாதிகளாகிய நாங்கள் கூட்டாக அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். அதேபோல் வா.சா.ஆ.1 பாகசாசனப்படி முத்துக்கவுண்டர் (எ) முத்துசாமிக்கவுண்டருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துகளைத்தான் அவரது காலத்திற்குப்பின் 1ம் பிரதிவாதியும் அவரது சகோதரிகளான மணிமேகலை மற்றும் சரஸ்வதி ஆகியோரும் கூட்டாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

3) மேற்சொன்னவாறு கூட்டு அனுபவத்தில் இருந்தநிலையில் 1ம் பிரதிவாதி தன் சகோதரியுடன் செய்து கொண்ட பாகசாசனப்படி வழக்கு வண்டித்தடம் அமைந்துள்ள சொத்துகள் 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டு அவர்கள் அனுபவத்தில் இருக்கிறது என்றால் சரிதான். ஆனால் அந்த வண்டித்தடம் அவரது சகோதரிகள் பாகத்திலும் செல்கிறது. வழக்கு வண்டித்தடம் 1ம் பிரதிவாதியின் சகோதரிகள் பாகத்திலும் செல்வதாக கூறும் நிலையில் அவர்களை ஏன் வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் 1ம் பிரதிவாதி சொத்தில் உள்ள இடத்தில் மட்டும் பிரச்சனை இருப்பதால் அவர்களை சேர்க்கவில்லை.

4) வழக்கு வண்டித்தடம் தொடர்பாக எங்கள் தரப்பில் மாண்புமிகு பொள்ளாச்சி சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.77/2015 தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வழக்கு தற்போதும் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அ.வ.எண்.77/2015 வழக்கில் பிரதிவாதிகளான மோனி மற்றும் சுப்பிரமணியம் ஆகியோர் இவ்வழக்கு தடத்தை இடையூறு செய்யக்கூடாதென விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரிதான் அவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். அவ்வழக்கில் வா.சா.ஆ.1 பாகசாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 10 லிங்ஸ் அகலமுள்ள வண்டித்தடத்தை இடையூறு செய்யக்கூடாதென கோரிதான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே வண்டித்தடத்தை இடையூறு செய்யக்கூடாதென கோரிதான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கு பிரதிவாதிகளிடம் மேற்படி வண்டித்தடத்திற்கு கூடுதல் அகலம் கேட்டு இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தற்போது நிலுவையில் அந்த வண்டித்தடம் 10 லிங்ஸ் அகலத்தில்தான் உள்ளது என்றால் சரிதான்.

5) மேற்படி வண்டித்தடம் பிஏபி வாய்க்கால் குறுக்கே கட்டப்பட்டுள்ள ஒரு பாலத்தில் இருந்துதான் ஆரம்பிக்கிறது என்றால் சரிதான். அந்த பிஏபி வாய்க்கால் மீதான பாலம்

அத்துறையினரால் கட்டப்பட்டது என்றால் சரிதான். அப்பாலத்தின் அகலம் 8 1/2 அடி என்றால் சரிதான். அந்த 8 1/2 அடி அகல பாலத்தின் வழியே வந்துதான் வழக்கு வண்டித்தடத்தை அடைய முடியும் என்றால் சரிதான்.

6) வா.சா.ஆ.1 பாகசாசனத்தில் வழக்கு வண்டித்தடத்தின் நீளம் மற்றும் அகலம் தெளிவுற குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பாகசாசனத்திற்கு பின்னிட்டு 1990 ல்தான் இருதரப்பினர் பூமியிலும் தென்னைகள் நடப்பட்டன என்றால் சரிதான். அவ்வாறு தென்னை நடும்போது 10 லிங்ஸ் வண்டிப்பாதைக்காக விட்டுதான் நடப்பட்டது என்றால் சரியல்ல. இருதரப்பினரும் நெருக்கிதான் மரங்களை நட்டோம். வண்டித்தடம் 6-7 லிங்ஸ்அகலம்தான் இருக்கும். அவ்வாறெனில் நாங்கள் மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தில் 10 லிங்ஸ் அகலம் என வண்டித்தடம் குறித்து கட்சி செய்தது தவறு என்றால் சரியல்ல. அந்த இடம் மோனி இடத்திற்கு அருகே உள்ள இடம். அந்த இடத்தில் 10 லிங்ஸ் அகலம் உள்ளது.

7) வா.சா.ஆ.1 ஆவணப்படி 10 லிங்ஸ் அளவு வண்டித்தடம் கோரிதான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எங்கள் மூதாதையர் பேசியவாறு தடத்தை விரிவு செய்து கோரியுள்ளோம். நாங்கள் வழக்குரையில் கூறியுள்ள வா.சா.ஆ.1 பாகசாசனத்திற்கு பின்னிட்டு ஏற்பட்டதாக சொல்லும் வாய்மொழி ஒப்பந்தம் யார் யாரிடையே எங்கு, எப்போது ஏற்பட்டது என்றால் மேற்படி பாகசாசனத்திற்கு பிறகு 1986 ல் ராக்கியப்ப கவுண்டரும், முத்துச்சாமி கவுண்டரும் தினசரி தோட்டத்திற்கு சென்று வரும் வழியில் அமர்ந்து பேசியதாகும். பின்னர் 1996-1997 ஆண்டு காலகட்டத்தில் எங்கள் தோட்டத்திற்கு தெற்கில் உள்ள தோட்டத்தில் என் முன்பும் வாழைத்தோட்டத்து அய்யன் முன்பும், ராக்கியப்ப கவுண்டரும், முத்துச்சாமி கவுண்டரும் பேசினார்கள். அப்போது என் தந்தை ராக்கியப்ப கவுண்டர் வண்டித்தடம் விரிவு செய்வதில் தாமதமாகி வருவதை பொதுமனிதரான

வாழைத்தோட்டத்து அய்யன் முன்பு கேட்க முத்துச்சாமி கவுண்டர் வண்டித்தடத்தை 16 அடி அகலம் 22 அடி வளைவு கொண்டதாக கனரக வாகனங்கள் செல்லும்படியாக அமைத்துத் தருவதாக கூறினார். அதன்பின்னிட்டு அத்தகைய வண்டித்தடம் எதுவும் நாளதுதேதிவரை அமைக்கப்படவில்லை என்றால் சரிதான். அத்தகைய வாய்மொழி ஒப்பந்தத்தை பின்னிட்டாவது எழுதிக் கொண்டார்களா என்றால் உறவினர்களாக இருந்ததால் எழுதிக் கொள்ளவில்லை. நான் சொல்வதுபோல் வண்டித்தடத்தை விரிவுபடுத்த எந்தவொரு வாய்மொழி ஒப்பந்தமும் எக்காலத்திலும், யாராலும் ஏற்படுத்தபடவில்லை என்றும் அவ்வாறு வாய்மொழி ஒப்பந்தம் ஏற்பட்டதாக செய்யும் கட்சி பொய்யானது என்றும் சொன்னால் சரியல்ல.

8) வழக்குரையில் பத்தி 11ல் "வாய்மொழி ஒப்பந்த 16 அடி அகல வண்டித்தடத்தை அளந்து அத்து செய்து அறுதியிட்டுக் கொடுக்கவேண்டுமாய்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் வழக்குரை பத்தி 13ல் "1ம் பிரதிவாதி தனது பூமியில் எப்போதும்போல் மேலே சொன்னபடி 25 அடி அகல தென்னை மரங்களுக்கு இடையே போகவர எவ்வித இடையூறும் செய்வதில்லை" என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாங்கள் கோருவதுபோல் 16 அடி வண்டித்தடம் அமைக்க 3 ம் பிரதிவாதியின் பூமியில் எத்தனை தென்னை மரங்கள் வெட்ட வேண்டியிருக்கும் என்றால் 10 லிங்ஸ் வண்டித்தடத்திலேயே தென்னை மரங்கள் வெட்ட வேண்டியிருக்கும். 3 ம் பிரதிவாதியின் பூமியில் 7 மரங்கள் வெட்ட வேண்டியிருக்கும். 3 ம் பிரதிவாதியின் பூமியில் வெட்ட வேண்டியதாக நான் சொல்லும் மரங்களின் வயது என்ன இருக்கும் என்றால் சுமார் 30 ஆண்டுகள் இருக்கும்.

9) மேற்படி பிஏபி வாய்க்கால் பாலத்தில் லாரி வரமுடியாது என்றால் சரிதான். அதிகபட்சமாக டிராக்டர்தான் வரமுடியும். வா.சா.ஆ.1 பாகசாசனப்படி 10 லிங்ஸ் வண்டித்தடம் விட பிரதிவாதிகளுக்கு ஒருபோதும் ஆட்சேபணை இருந்ததில்லை என்றால் நாங்கள்

கூடுதலாக வண்டித்தடம் கேட்கிறோம். அவ்வாறு கூடுதல் அகலம் கொண்ட வண்டித்தடம் கோர எங்களுக்கு உரிமையில்லை என்றால் நாங்கள் ஒரே பாகஸ்தர். நாங்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க வழக்கு வண்டித்தடத்தை 16 அடியாக விரிவுபடுத்த 3ம் பிரதிவாதிக்கு எவ்வித கடப்பாடோ, கடமையோ இல்லை என்றால் சரியல்ல. எங்கள் மூதாதையர் காலம் முதலே இருதரப்பினராலும் 10 லிங்ஸ் வண்டித்தடம்தான் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்றால் சரிதான். அந்த 10 லிங்ஸ் வண்டித்தடத்தைப் பயன்படுத்துவதில் இருதரப்பிற்கும் எவ்வித சிரமமும் இல்லை என்றால் சரியல்ல. தற்போது கனரக வாகனங்கள் கொண்டுவர தேவை உள்ளது.

10) வழக்கு வண்டித்தடம் மற்றும் அதனை சுற்றியுள்ள சொத்துகள் ஆகியவற்றின் அமைப்பு மற்றும் தன்மையை காட்ட நீதிமன்ற ஆணையர் மூலம் பார்வையிட நாங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து விவரங்கள் கற்பனையானது என்றும், பூமியில் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. நாங்கள் கோரிய பரிகாரத்திற்கும் வழக்கு சொத்து விவரத்திற்கும் தொடர்பல்ல என்றால் சரியல்ல. நாங்கள் கற்பனையாக உருவாக்கியுள்ள சொத்து விவரத்திற்கு விளம்புகை பரிகாரமோ, உறுத்துக்கட்டளை பரிகாரமோ வழங்க இயலாது என்றால் சரியல்ல. வாய்மொழி ஒப்பந்தம் ஏற்பட்டதாக பொய்யாக சொல்வதால்தான் அத்தகைய வண்டித்தடம் ஏதும் நடைமுறைக்கு வரவில்லை என்றால் சரியல்ல.

11) வா.சா.ஆ.1 ஆவணப்படி குறிப்பிட்டுள்ள வண்டித்தடம் தான் நிலையில் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணப்படி குறிப்பிட்டுள்ள வண்டித்தடம் பயன்பாட்டை பிரதிவாதிகள் ஒருபோதும் ஆட்சேபிக்காததால் இவ்வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நாங்கள் கட்சி செய்துள்ளதுபோல் 1986 வருடவாக்கில் ஏற்பட்டதாகச் சொல்லும்

வாய்மொழி ஒப்பந்தம் மற்றும் 1996-1997 வருடவாக்கில் ஏற்பட்டதாக சொல்லும் பேச்சுவார்த்தை ஆகியவை நடைபெறவில்லை என்றும் அவற்றை நடைமுறைப்படுத்த தற்போது தாக்கல் செய்துள்ள வழக்கு காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. வழக்குப் பரிகாரங்கள் கிடைக்கத்தக்கது அல்ல என்றும் வழக்கு தள்ளுபடிக்குரியது என்றும் சொன்னால் சரியல்ல.

| |
|---|
| இச்சாட்சியம் என் முன்பு திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியபடி நான் கூற தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

**ஒப்பம்/- (மு.ச.ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி